**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

முன்னிலை: திரு. இரா. இராஜசேகரன், L.L.M.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குன்னம்.

2026–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10–ஆம் நாள் திங்கட்கிழமை

**<u>குற்றப்பல்வகை மனு எண். 352/2026</u>**

செல்வேந்திரன், வயது 42/2026
த/பெ. தங்கராசு
201 மெயின்ரோடு
ஆதனக்குறிச்சி
செந்துறை வட்டம் (அஞ்சல்)
அரியலூர் மாவட்டம். .....எதிரி/மனுதாரர்/வழக்குச்சொத்தின் உரிமையாளர்

/எதிர்/

மாநில அரசின் அதன் சார்பாக
காவல் உதவி ஆய்வாளர்,
மங்களமேடு காவல் நிலையம்,
குற்ற எண். 380/2026
U/s.303(2) of BNS &
21(1) of MMDR Act ....எதிர்மனுதாரர்/குற்ற முறையீட்டாளர்

இம்மனு 10.08.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.D.ராஜவேல் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் காவல் துறையினரால் உரிய பதில் தரப்பட்டும், இருதரப்பினரையும் கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர் தரப்பில் வழக்குச் சொத்தான ஒரு செவலக்காளை (சிகப்பு நிறம்), ஒரு வெள்ளைக்காளை (வெள்ளை நிறம்) ஆகிய மாடுகளின் உரிமையாளர் ஆவேன் என்றும், மேற்படி காளை மாடுகளை மங்களமேடு காவல் நிலைய குற்ற எண். 380/2026–ல் U/s. 303(2) of BNS, 21(1) MMDR Act–இன் கீழ் வழக்கு பதிவு செய்து மேற்சொன்ன மாடுகளை பறிமுதல் செய்தார்கள். ஆனால், பறிமுதல் செய்யப்பட்ட மாடுகளை இன்று வரை மங்களமேடு போலீசார் மாண்பமை நீதிமன்றத்தில் R.P செய்திடவில்லை என்றும், இந்த வழக்கிற்கும் எனக்கும் எந்தவித தொடர்புமில்லை என்றும், தவறுதலாக தனது காளைகளை இவ்வழக்கில் காவல் துறையினர் அவர்களது பொறுப்பில் கொண்டு சென்றுள்ளதாகவும், மேற்சொன்ன காளை மாடுகளை வைத்து விவசாயத்திற்கு பயன்படுத்தி வருவதால் அதற்கு சரியான நேரத்தில் பசுந்தீவனம் மற்றும் புண்ணாக்கு ஆகியவை சரியாக வழங்காமல் விட்டு விட்டால் அவை மெலிந்து

உடல்நல பாதிப்பு ஏற்படும் என்றும், எனவே மேற்சொன்ன ஒரு ஜோடி காளை மாடுகளை மாண்பமை நீதமன்றத்தில் ஒப்படைத்து ஆர்.பி செய்திடவும், ஆர்.பி செய்த மேற்படி காளை மாடுகளை தனது இடைக்கால பொறுப்பில் வழங்கி உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. அரசு தரப்பிற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதில் இவ்வழக்கு சொத்தை வாதியிடம் ஒப்படைத்தால் வாதி வழக்கு சொத்தை விற்கவோ, மீண்டும் இது போன்ற குற்ற செயல்களுக்கோ பயன்படுத்த வாய்ப்புள்ளது என்றும் குறிப்பிட்டு வாதியிடம் வழக்கு சொத்தை ஒப்படைக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேலும் வழக்கு சொத்தான காளை மாடுகள் திருச்சி மாவட்டம், வயலூரில் உள்ள ஸ்ரீகோசலா மாடுகள் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

4. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்குச் சொத்தானது ஒரு செவலக்காளை, ஒரு வெள்ளைக்காளை என்பது தெரிய வருகிறது. மேற்படி காளை மாடுகள் மங்களமேடு காவல் நிலைய போலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

5. மேலும் மனுதாரர் தரப்பில் மேற்படி காளை மாடுகளை காவல் துறையினர் வசம் வைத்திருக்கும் போது பசுந்தீவனம் மற்றும் புண்ணாக்கு ஆகியவை சரியாக வழங்காமல் விட்டு விட்டால் அவை மெலிந்து உடல்நல பாதிப்பு ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட காளை மாடுகள் மனுதாரருடையது அல்ல என்று அரசு தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும் மேற்படி கோசாலையில் உள்ள காளை மாடுகளின் ஆவணங்கள் அனைத்தும் மனுதாரர் பெயரில் இருப்பதாக மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. வழக்கு முடியும் வரை வழக்குச் சொத்தை காவல் துறை வசம் (கோசாலை) வைத்திருப்பது மனுதாரருக்கு மிகுந்த இழப்பை ஏற்படுத்தும் என்பதாலும், மேலும் வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், வழக்குச்சொத்தை கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றும் பட்சத்தில் மனுதாரரிடம் இடைக்காலமாக அளிக்க உத்தரவிடப்படுகிறது.

## <u>நிபந்தனைகள்</u>

1. மனுதாரருக்கு சொந்தமான மேற்சொன்ன காளை மாடுகள் மதிப்பிற்கேற்ப மனுதாரர் மற்றும் இருநபர்கள் தலா ரூ.10,000/—க்கு பிணையப்பத்திரங்களை இந்நீதிமன்றம் திருப்தியுறும் வகையில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.
2. மேற்கண்ட ஒரு ஜோடி காளை மாடுகளை நான்கு கோணங்களில் புகைப்படம் எடுத்து அந்த புகைப்படத்துடன் அதற்குண்டான குறுந்தகட்டினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

3. மேற்படி வழக்குச் சொத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ கூடாது.
4. நீதிமன்றம் கோரும் போது வழக்குச் சொத்தினை நேரில் ஆஜர்படுத்த வேண்டும்.

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இந்த நீதிமன்றத்தில் 10.08.2026 தேதியன்று அவையறியப் பகரப்பட்டது.

RAJASEKARAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by RAJASEKARAN
Location: Kunnam
Date: 2026.08.10 17:26:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், குன்னம்.